முருகப்பெருமான் துணை

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

27.06.2024

1. சரவண ஜோதியில் கலந்து
சடாட்சர பலமாய் வெளிப்பட்டு
அறிவுரை அருளாசி நூலாக
அருளுவேன் குருவாரம் தோறும் அன்பர்கட்கு

2. அன்பர்கட்கும் பிரணவக் குடிலுக்கும்
அகிலத்தின் சேமம் குறித்தும்
இன்பமான தரும சேவை வளரவும்
என் தொண்டர் பெருமக்களை தேற்றவும்

3. தேற்றவும் குரோதி ஆனி திங்கள்
தக்க முன்னான்கோர் திகதி குருவாரம் சஷ்டி நாளில்
ஆற்றல்பட அரங்கனும் அருளுவேன்
அறம்மிக்க பிரணவக்குடில் புஜண்டமகரிஷி மண்டபத்தில்

4. மண்டபத்தில் ஜோதி சொரூபமாகி
மக்களை மாதருமத்தை அரங்கனும்
தொண்டர்களையும் கவனித்து வருகிறேன்
தேடி வரும் மக்கள் யாவருக்கும்

5. யாவருக்கும் வேண்டும் வரமீந்து
எல்லா வளமும் பெற அருளுகிறேன்
அவணியெங்கும் பிரணவக்குடிலிலிருந்து
ஆற்றலாக என் சக்தி பரவி

6. பரவி அனைத்து தருமசாலைகளை
பாதுகாத்து பண்புடன் நடத்திவர
பரதம் முதல் பேருலகம் எங்கிலும்
பரவியே சன்மார்க்கம் தழைத்து

7. தழைத்துமே அரங்கன் என் அவதார
தக்க நோக்கம் வெற்றி காணும்
சளைக்கா தொண்டாற்றும் மக்களை
சற்குருவாய் காத்து யானிருக்க

8. இருக்கவே என் மக்கள் கலங்கா
ஏற்று எல்லா முழுமதியிலும்
கருத்தாக பிரணவக்குடிலை நாடிவர
காட்சியும் ஆசியும் தருவேனப்பா

9. அப்பப்பா என் சீடர் பெருமக்களின்
அளவிலா தொண்டு போல் எங்கும் காணேன்
காப்பேன் தொண்டரோடு அவர்கள் குடியையும்
கருணைபட மீட்பேன் இனி பிறவா வண்ணம்
அரங்கமகான் அருளாசி முற்றே.

–சுபம்–